2019 பிப்ரவரி 12]

சிறுநீர் பரிசோதனை, 100 சதவிகிதம் HIV ஆலோசனை மற்றும் பரிசோதனை, நீரிழிவு நோய் மற்றும் கர்ப்பக்கால இரத்த அழுத்த நோய் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களைக் கண்டறிதல் ஆகிய அனைத்தும் மேம்படுத்தப்பட்ட ஆய்வுக்கூட உபகரணங்களைக் கொண்டு இலவசமாக செய்யப்படுகின்றன. அதேபோல் ultrasonogram பரிசோதனை, காச நோய்க்கான பரிசோதனை மற்றும் சுகப் பிரசவத்திற்கான சிகிச்சை, பிரசவத்திற்குப் பிறகு குடும்ப நல அறுவை சிகிச்சை, தேவைப்படும் தாய்மார்களுக்கு கருக்கலைப்பு போன்ற அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புற்றுநோய் சம்பந்தமாகக் கேட்டார்கள். நாங்கள் கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சரின் பார்வைக்கு எடுத்துச்சென்று அதனையும் ஏற்படுத்தித் தருவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

நீதிமன்றக் கட்டடங்கள்

***6762—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூரில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைத் தனித்தனிக் கட்டடங்களில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களுக்குத்

தனியாகக் கட்டடங்கள் வேண்டுமென்று கோரியுள்ளார்கள். உயர் நீதிமன்றத்திலிருந்து எந்தவிதமான முன்மொழிவும் பெறப்படவில்லை. பெறப்பட்டவுடன் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.*

முற்பகல் 10–35

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேடசந்தூர் தொகுதியில் நீதிமன்றம் மற்றும் வழக்கறிஞர்கள் சார்ந்த எந்தக் கோரிக்கையாக இருந்தாலும் அதை நிறைவேற்றித் தந்த பெருமை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணமாக எங்களுடைய தொகுதிக்கு சார்பு நீதிமன்றமாக இருந்தாலும் சரி, உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக இருந்தாலும் சரி, புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களாக இருந்தாலும் சரி, இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. அந்த வரிசையில், கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் வழக்கறிஞர்கள் மற்றும் நீதியரசர்களுடைய கோரிக்கையினை ஏற்று, ஒன்றாக இருந்த உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களைப் பிரித்து, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் என்றும், கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் என்றும் இரண்டாகப் பிரிப்பதற்கு ஓர் அரசாணையை வெளியிட்டார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு தனியாக இயங்கி வருகின்ற இந்த மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒரு சிறிய அறையில் நடைபெறுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இப்போது கிட்டத்தட்ட 2,200 வழக்குகள் இந்த மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலே ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே, வழக்கறிஞர்கள் மற்றும் அங்கே உள்ள நிருவாகச் சிரமங்கள் இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, இந்த மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மட்டும் ஏற்கெனவே இருக்கின்ற அந்த* Court Complex*–ல் இடவசதி இருக்கின்ற காரணத்தினால் தனியாக ஒரு கட்டடம் கொடுப்பார்களேயானால், அனைவருக்கும் அது சுலபமாக இருக்கும். மேலும், அந்த* Court Complex*–ல் மூன்று,*

2019 பிப்ரவரி 12]

நான்கு மாடிகள் இருக்கின்றன. எங்களுடைய வேடசந்தூர் தொகுதியிலே வாகன விபத்துகள் சம்பந்தப்பட்ட வழக்குகளிலே பாதிக்கப்பட்டவர்கள், குறிப்பாக, உடல் ஊனமுற்றவர்கள் நிறைய பேர் வருகிறார்கள். மூன்று மாடிகள் ஏறுவதற்கு அவர்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அந்த existing Court Complex*–ல் ஒரு* lift *வசதியை ஏற்படுத்தித் தந்து, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு ஒரு சிறிய தனி கட்டடமும் அமைத்துத் தந்தால் உதவியாக இருக்கும். அதை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, தமிழகத்திலே இருக்கின்ற நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்ற உயர் நீதிமன்றத்தினுடைய ஆலோசனையை ஏற்று, உயர் நீதிமன்றம் பரிந்துரைக்கின்ற அனைத்துப் பரிந்துரைகளையும் ஏற்று, அரசாணை பிறப்பித்து, புதிய கட்டடங்களைக் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறது. 2011–2016 ஆம் ஆண்டைய காலக்கட்டத்தில், ரூ.711.18 கோடி மதிப்புள்ள புதிய கட்டடங்கள், புதிய நீதிமன்றங்களைத் திறப்பதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்து, அவையெல்லாம் தற்போது நல்ல முறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி, இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் மட்டும் ரூ.1,142.80 கோடி மதிப்பீட்டிலே புதிய நீதிமன்றக் கட்டடங்கள், புதிய நீதிமன்றங்களைத் திறப்பது மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, வரலாற்றில் இல்லாத அளவிற்கு ரூ.1,142.80 கோடி ஒதுக்கீடு செய்த அரசு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு. ஆகவே, கண்டிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும். ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, பேதம் பார்க்காமல் அனைவருடைய கோரிக்கைகளையும் ஏற்று, உயர் நீதிமன்றத்திலிருந்து முறையாக அரசு பரிந்துரை பெறும்பட்சத்தில், காலதாமதமின்றி நிறைவேற்றிட, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தனியாக ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடம் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்.*

மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை கண்டிப்பாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலனை செய்யும். ஆனால், அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கிருக்கின்ற மாவட்ட நீதிபதியிடம் சொல்லி, பொதுப் பணித் துறையின் மூலமாக அதற்கு மதிப்பீடு தயார் செய்து, உயர் நீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்து, உயர் நீதிமன்றம் அதனையேற்று அரசுக்குப் பரிந்துரை செய்யும்பட்சத்திலே, உடனடியாக, கண்டிப்பாக அம்மாவினுடைய அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதனை நிறைவேற்றித் தருவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்தப் பரிந்துரையை அனுப்புகின்றபோது, அவர் கோரிய அந்த lift வசதியையும் சேர்த்து, பொதுப் பணித் துறையின் மூலமாக உயர் நீதிமன்றத்திற்குப் பரிந்துரை அனுப்பும்பட்சத்திலே கண்டிப்பாக அரசு அதைப் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டிலே அந்தக் கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியில் வடமதுரை ஒன்றியம், பில்லாத்து ஊராட்சி, ஆண்டிப்பட்டி கிராமத்திற்கு அருகிலே Granite quarry சில மாதங்களாக இயங்கி வருகிறது. இந்த Granite quarry இயங்குவதை எதிர்த்து பொது மக்கள் தொடர்ந்து எதிர்ப்பினைத் தெரிவித்து வருகிறார்கள். போராட்டங்களை நடத்தியும், நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே முறையிட்டும் தங்களது தொடர் எதிர்ப்பினைப் பதிவு செய்து வருகிறார்கள். அவர்களுடைய அச்சம் என்னவென்றால், அந்த Granite quarry–க்கு மிக அருகிலே இந்தக் கிராமம் இருக்கிறது; பள்ளிக்கூடங்கள், மயானம், இவையெல்லாம் இருக்கின்றன. அந்தக் கிராமத்தினுடைய வருங்கால விரிவாக்கம் என்பது சாத்தியமில்லாமல் போகும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால், அந்தக் கிராமத்திற்கு அருகிலே Quarry இருப்பதால் தங்களுடைய எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறார்கள். ஒரு வருடத்திற்கு முன்னதாக. . .

2019 பிப்ரவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், (குறுக்கீடு) சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் என்பதை ஒத்துக்கொள்கிறேன். அப்படிக் கேட்டால் வழக்கமாக சரியாக வராது. நீங்கள் நீதிமன்றம் குறித்துக் கேட்டீர்கள். நீதிமன்றம் குறித்து கேள்வி இருந்தால் அமைச்சரிடம் பதில் இருக்கும். இருந்தாலும் சொல்வார். சரி, கேள்வியை முடியுங்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால் பொது மக்களுடைய அந்தக் கோரிக்கையையேற்று அந்த Granite quarry அமைப்பதற்குத் தடை விதிக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியிருக்கின்ற அந்த quarry விதிகளை மீறி செயல்பட்டால், மாவட்ட ஆட்சியரிடம் கலந்து பேசி, அப்படி ஏதாவது தவறு இருக்கும்பட்சத்தில், கண்டிப்பாக அதன்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுக் கடன் சங்கம்

***7092—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கென கைத்தறி நெசவாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?